### மேகதாது விவகாரம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் இன்று ஆலோசனை!

## அமைச்சர் துரைமுருகன் தகவல்!

சென்னை, ஜூலை.3-

மேகதாது விவகாரம் குறித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் ஆலோசனை நடத்த உள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.



கர்நாடகத்தில் உற்பத்தி ஆகும் காவிரி உபரி நீரை பயன்படுத்த தமிழ்நாடு சட்டவிரோத திட்டங்களை அமல்படுத்துவதாக மத்திய அரசிடம் அம்மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் பரபரப்பு புகார் கூறியுள்ளார். மேலும் மேகதாது திட்டத்திற்கு உடனே அனுமதி வழங்கவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் மேகதாது விவகாரம் குறித்து முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் ஆலோசனை நடத்த உள்ளதாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று பேட்டியளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, "மேகதாது விவகாரம் குறித்து நாளை (இன்று) காலை முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் ஆலோசனை நடத்த உள்ளேன். அதைத் தொடர்ந்து டெல்லி சென்று காவிரி மேலாண்மை வாரியத்திலும் மேகதாது குறித்து ஆலோசிக்க உள்ளேன்" என்று கூறினார்.



சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (02.07.2023) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி விடுதியில் மாணவியரை சந்தித்து விடுதியிலுள்ள அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு தேவையான கூடுதல் வசதிகளை செய்து தந்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கா.ப. கார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மண்டல் இணை ஆணையர் திருமதி கவிதா பிரியதர்ஷினி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகே நடைபாதையில் ஆழ்துளைக் கிணறு!

## வீட்டு உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவு!

சென்னை, ஜூலை 3-

சைதாப்பேட்டை, அடையாறு மண்டலம், அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகில், காவிரி நகர் 70 அடி சாலையில் ஆழ்துளைக் கிணறு அமைத்த வீட்டின் உரிமையாளர் மற்றும் போர்வெல் காண்டிராக்டர் மீது அறிவுரையின்படி காவல்துறையின் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (2.7.2023) காலை சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மக்களைச் சந்திக்கச் செல்லும் போது, அடையாறு மண்டலம்13, வார்டு 169, காவிரி நகர், அரங்கநாதன் சுரங்கப்பாதை கிழக்குப் பகுதியில் 70 அடி சாலையின் தெற்கில் உள்ள கதவு எண் 14 வீட்டின் உரிமையாளர் தனது வீட்டிற்காக 70அடி சாலையின் நடைபாதையில் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணி மேற்கொண்டிருந்ததையும், ஆழ்துளைக் கிணறு அமைக்கும் போது வெளியேறும் ஈரக்களிமண் கொண்ட கழிவானது சாலை முழுவதும் பரவிக் கிடந்ததையும் கண்டறிந்து, உடனடியாக இப்பணியினை தடுத்து நிறுத்தி, இதனை மேற்கொண்ட வீட்டின் உரிமையாளர் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணியினை மேற்கொண்டவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இந்த இடத்தினைப் பார்வையிட்டு வீட்டின் உரிமையாளர் சுரேஷ் மீதும் மற்றும், ஆழ்துளைக் கிணறு அமைத்த வாகனத்தை கைப்பற்றி அதன் உரிமையாளர் மீதும் காவல்துறையில் வழக்குப் பதிந்து நடவடிக்கை மேற்கொள்ள செயற்பொறியாளர் ஆர்.புருசோத்தமன் வாயிலாக காவல்துறையில் புகார் அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# ஆளுநர் ஆர்.என்.ரவியின் அசாதாரண அத்துமீறல்கள்!

## "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டின் தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 3 -

மீண்டும் செய்திகளில் இடம் பிடித்த தமிழ்நாட்டு ஆளுநர் ஆர். என். ரவி, இந்திய அரசமைப்பு சட்ட விதிகளுக்கு மாறாக ஒருதலைப்பட்சமான முடிவுகளை மேற்கொண்டு, தொடர்ந்த அத்துமீறல்களில் ஈடுபட்டு வருவதாக டைம்ஸ் ஆப் இந்தியா நாளேடு தனது தலையங்கத்தில் விமர்சனம் செய்திருக்கிறது.

அது பற்றிய விபரம் வருமாறு :

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மீண்டும் செய்திகளில் இடம் பிடித்திருக்கிறார். நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள அமைச்சர் வி. செந்தில்பாலாஜியை வியாழக்கிழமை மாலை ஒருதலைப்பட்சமாக தகுதியிழப்பு செய்து ஒரு கடிதமெழுதிய நிலையில், அந்தக் கடிதத்திற்கு மற்றொரு மறுப்பு கடிதத்தை அன்று பின்னிரவே எழுதி, தனது முடிவை நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளார். வெள்ளிக்கிழமை பிற்பகலில் பணிநீக்கம் குறித்த அவரது அறிவிப்பை புறக்கணிப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.

செந்தில் பாலாஜி அமைச்சரவையில் நீடிப்பது குறித்த விஷயத்தில் அரசியலமைப்பு நிலைப்பாடு தெளிவாக இருப்பதால் எவ்வித மான சந்தேகத்திற்கும் அதில் இடமில்லை. இந்த நிலையில் ஆளுநர் ஆர்.என். ரவி தன்னிச்சையாக அமைச்சரை தகுதி நீக்கம் செய்வதாக கடிதம் எழுதியது தவறு. அமைச்சரவையை அமைப்பதில் முதல்வரின் ஆலோசனைப்படியே ஆளுநர் செயல்பட வேண்டும் என்றே அரசியல் சாசனம் தெளிவாக குறிப்பிடுகிறது.

1967 ஆம் ஆண்டு காலகட்டம் வரையில், ஆளுநர்களுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையிலான உறவுமுறை வரலாறு என்பது பெரும்பாலும் சீரற்ற விதத்திலேயே அமைந்திருந்தது. அதைத் தொடர்ந்து மாநிலங்களில் ஒன்றிய அரசின் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வரும் நிகழ்வுகள் அதிகரித்தபோது, சம்பந்தப்பட்ட மாநில ஆளுநர்களின் முடிவுகள் பெரும்பாலும் நீதிமன்ற சர்ச்சைகளுக்கே வழிவகுக்கும் விதத்தில் அமைந்திருந்தன. அதன் விளைவாக ஆளுநரின் அதிகார வரம்புகள் குறித்த தெளிவான பார்வையை அளிக்கும் பல்வேறு தீர்ப்புகளின் தொகுப்பை உச்ச நீதிமன்றம் கொண்டுள்ளது. ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன் அளிக்கப்பட்ட ஒரு முக்கியமான தீர்ப்பில் (ஷம்ஷேர் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம்) ஆளுநர், மாநில அரசுக்கு இணையான ஒரு நிர்வாகத்தை நடத்துவதை அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியது. அதாவது, ஆளுநரின் விருப்புரிமை அதிகாரங்கள் என்பது வரையறுக்கப்பட்டவை ஆகும்.


THE TIMES OF INDIA

TOI EDIT

Chennai's Super King

RN Ravi's extraordinary gubernatorial excesses

Tamil Nadu governor RN Ravi is back in the news. On Thursday evening he unilaterally dismissed a minister, V Senthilbalaji, who's in judicial custody. Late in the night, he put his decision on hold. By Friday afternoon, the state government announced it would disregard his communication on the dismissal. There's no room for doubt as the constitutional position is clear. Ravi was wrong to unilaterally dismiss the minister. The Constitution makes it clear that the governor is to act on the advice of the CM when it comes to the composition of the council of ministers.

The period till 1967 was largely uneventful in the history of engagement between governors and states. Subsequently, when the incidence of opposition coming to power in states rose, decisions of governors often led to judicial disputes. Consequently, the apex court has a body of verdicts that gives a clear picture of the limits of a governor's power. An important verdict almost 50 years ago (Shamsher Singh vs State of Punjab) said that the Constitution does not envisage the governor running a parallel administration. The discretionary powers of a governor are limited.

Governors sometimes seem to yearn for the British Raj's 1935 legislation that gave them discretionary power and even allowed them to chair a meeting of the council of ministers. That era is over. Sitting on bills cleared by the assembly or trying to unilaterally change the council of ministers disrupts a state's governance. As most such cases end up as judicial disputes, it further clogs the system. Ravi's conduct in this matter and a tendency to sit on bills has left a lot to be desired. It undermines the integrity of the constitutional office that's an important link between GOI and states. GOI should talk to him.

ஆளுநர்கள் சில நேரங்களில் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் 1935ஆம் ஆண்டு சட்டத்தை மனதில் நினைத்துக்கொண்டு செயல்படுவதாகத் தெரிகிறது. ஏனென்றால், அந்த சட்டம் அவர்களுக்கு விருப்புரிமை அதிகாரத்தை வழங்கியிருந்தது. அத்துடன், அமைச்சரவையின் கூட்டத்திற்கு தலைமை தாங்கவும் அனுமதித்திருந்தது. அந்த சகாப்தம் எப்போதோ முடிந்துவிட்டது. ஒரு மாநிலத்தின் சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், அவற்றைக் கிடப்பில் போட்டு வைப்பது அல்லது ஒரு தலைப்பட்சமாக அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி செய்வது ஆகியவை சம்பந்தப்பட்ட மாநிலத்தின் அரசு நிர்வாகத்தை சீர் குலைத்து விடும்.

இது போன்ற பெரும்பாலான நடவடிக்கைகள் நீதித்துறை சர்ச்சைகளாக முடிவடைவதால், அரசு எந்திரத்தை அது மேலும் முடக்குவதாக மாறுகிறது. இந்த விஷயத்தில் ஆர். என். ரவியின் நடத்தையும், சட்ட மசோதாக்களை கிடப்பில் போடும் போக்கும் கவனத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது. அப்படிப்பட்ட போக்குகள் ஒன்றிய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையில் முக்கிய பிணைப்பாக உள்ள அரசியலமைப்பு விதிகளை நிறுவுவதில் உள்ள ஒருமைப்பாட்டைக் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது. இது குறித்து ஒன்றிய அரசு ஆளுநரிடம் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

இவ்வாறு 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!




**தமிழ்நாட்டில் இருக்க ஆளுநருக்கு தகுதியில்லை!**

- அரசியலமைப்பு சட்டத்தின் ABCD கூட ஆளுநருக்கு தெரியவில்லை. அவருக்கு ஒரு நிமிடம் கூட தமிழ்நாட்டில் இருக்க தகுதியில்லை. எல்லோரும் சிரிக்கும்படி நடந்துக் கொண்டிருக்கிறார்.
- ஒரு விசாரணை காவல் அதிகாரி, சாட்சிகளை மிரட்டுவதைபோல் ஆளுநரின் விளக்கக் கடிதம் இருந்தது.
- அமைச்சரை நீக்குவதோடு, நிறுத்திக்கொள்ளாமல் பா.ஜ.க தலைவர் அண்ணாமலைக்கு பிடித்த ஒருவரை அமைச்சராக வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளட்டும்.
- பா.ஜ.க-வின் நிலை தமிழ்நாட்டில் பாலைவனம் போல இருப்பதால் எதைஎதையோ செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

- மூத்த பத்திரிகையாளர் "இந்து" என். ராம் கடும் சாடல்!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை - நா.எழிலன் வழங்குகின்றனர்!

# ஆயிரம் விளக்கு மேற்கு - 109 'அ' வட்டத்தில் 500 பேருக்கு நல உதவிகள்!

## பி.லோகநாதன் தலைமை! வினோத் வேலாயுதம் முன்னிலை!

சென்னை, ஜூலை 3-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி - 109 'அ' வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளை முன்னிட்டு 500 ஏழை எளியோர்க்கு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இன்று (3.7.2023 - திங்கட்கிழமை) இன்று காலை 10.30 மணியளவில் சூளைமேடு - பஜனைகோயில் மெயின் ரோடில் - பஜனை கோயில் எதிரில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு - முன்னாள் வட்ட அவைத் தலைவர் பி.லோகநாதன் தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் முன்னிலை வகிக்கிறார்.

ச.டேவிட் இன்பராஜ், க.தங்கமணி, பாண்டிசுரேஷ், இரா.முத்துக்குமார், ஆ.விஜயகுமார், ஜி.கே. ராஜா, எஸ்.மாலா, வாஞ்சிநாதன், ஆர்.நைனியப்பன், ஆர்.நீலகண்டன், என்.எஸ். சுப்பிரமணி, ஆர்.சேகர், பி. கோவிந்தராஜன், பி.பிரபாகரன், கா.செல்வம், கி.மணி, க.அன்பழகன், மத்தியாஸ், எஸ்.மோகன்ராஜ், கிண்டி ஆர்செல்வம், ஆர்.பொன்னுரங்கம், ராம்குமார், நாகூர் ரபிக் மஜித், டி.சதீஷ்ராஜ், பி.என்.சந்திரசேகரன், இ. தாவுத் பாஷா, பி.டி.சி. சுரேஷ், சி.தங்கராஜ, டி. லாசர், பால்ரங்கநாதன், ஏ. எஸ்.சிவசாமி, எஸ்.ஐசக் ராஜ், எஸ்.என்.குமார், ஆர். முருகையன், சின்மயா நகர், பொன்.வர.லோகு, சி.என். கமல், எஸ்.சுந்தர், பாலன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, நா.எழிலன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு, ஏழை எளியோர் 500 பேருக்கு நல உதவிகள் வழங்குகின்றனர்.

எஸ்.மோகன், நுங்கை வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர். நாதன், டி.ஜோஸ் டேனியல், து.விக்டர், வி.எஸ். கலை, ஆர்.என்.துரை, ஜெ. எஸ்.அகஸ்டின்பாபு, ஆர். சங்கீதா, பா.பிரகாஷ், நுங்கை சுரேஷ், கே.குட்டி, ஜெ.எம்.எச்.இம்ரான்,

புவி.பாலாஜி, என். பி.இதாயத் பாஷா,ஸ்டெர்லிங் மோகன், பா.கமலக் கண்ணன், பொன்னம்மாள், க.சிட்டிபாபு, வரதை த.பரி, மு.மோகன், த.குணசேகரன், கே.எஸ்.தினேஷ்பிரபு, அ.குப்பன், த.ஐசன்ட், வி.என்.பாபு, எஸ்.பார்த்திபன், எம்.டி.ஆர்.புகழ், கே.தட்சிணா மூர்த்தி, என்.இ.சரணவன், க.சீனிவாசன் உள்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

ஈ.லட்சுமணன் நன்றி கூறுகிறார்.

### கலைஞர் நூற்றாண்டு விழா: து.பசுபதி ஏற்பாடு: மாதவரம் வடக்கு -

# 17வது வட்டம் - வடபெரும்பாக்கத்தில் கபடி போட்டி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜூலை 3-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு து.பசுபதி ஏற்பாட்டில் இரண்டு நாள் மாபெரும் கபடி போட்டி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., என்.பரந்தாமன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

போட்டி ஏற்பாடு து.பசுபதி, ர.விஸ்வநாதன், கு.மாறன், எஸ்.பிரகாஷ், பா.அருண்ராஜ்,

இதில் எஸ்.நந்தகோபால், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், புழல் எம்.நாராயணன், ஜி.துக்காராம், ர.ரா ஜேந்திரன், க.காசிநாதன், எஸ்.ஏ. சீனிவாசன், ப.கருணாநிதி, வி.மணிகண்டன், ஈ.கண்ணப்பன், கே.கருணாகரன், ஈ.அங்குசாமி, க.தாமரை செல்வன், என.சநதிரன், வி.திராவிட வீரன், எஸ். கௌரி சங்கர்லால், கோவிந்தராஜ், ஜீ.ரவிச்சந்திரன், எஸ்.சுகேந்திரன், என். குமார், வி.பார்த்தசாரதி, ஸ்டாலின், லதாபிரகாஷ், சி.குணசேனகரன், அ.அருணசலம், எஸ்.தேவராஜ், ஜீ. சேகர், ர.முருகன், த.குமார், ப.அயத்னதியன், எஸ்.மகேனஷ், எஸ்.சேகர்ராஜன், எஸ்.மாரி, சந்திரசேகர், வி. வரதன், தே.அமிர்தராஜ், ரவிச்சந்திரன், க.தீபன், ச. ராஜன் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் 1ல் 11வது வார்டு பகுதியில் மண்டலம் 2-ல் 24 வது வார்டு பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் மருத்துவ காப்பீடு திட்டம் அட்டை புதுப்பித்தல் முகாம் நடைபெற்றது. இம்முகாமை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி துவக்கி வைத்தார். அப்பொழுது மாநகராட்சி ஆணையர் அழகுமீனா, மண்டல தலைவர்கள் வே. கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னாட், மாமன்ற உறுப்பினர் கீதா நாகராஜன், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கண்டோன்மெண்ட் நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் டி.பாபு தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை கழக பேச்சாளர் ஆடுதுறை உத்ராபதி ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம், பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், கழகப் பேச்சாளர் மீ.மலர்மன்னன் மற்றும் வட்டச் செயலாளர்கள் உள்ளனர்.